**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-11/Lw-16 |
| Name | : | Dr. கேசவமூர்த்தி |
| Father Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் கோவை KMCH மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சை பிரிவில் தலைமை மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 01.08.2022–ம் தேதி இரவு 11:35 மணியில் அளவில் நான் மருத்துவமனையில் பணியில் இருந்த போது சிவக்குமார் என்பவரை

அவருடைய சகோதரர் பரத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அன்றைய தினம் இரவு 9.30 மணி அளவில் சிகிச்சை அளித்தபோது தெரியாத சில நபர்கள் கூர்மையான ஆயுதத்தால் அவரை தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக என்னிடம் தெரிவித்தார். அவர் திருப்பூர் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுள்ளார்.

2. அவரை நான் சிகிச்சை அளித்த தேதியில் பரிசோதனை செய்த போது கீழ்க்கண்ட காயங்கள் ஏற்பட்டு இருந்தது. தலையில் காயம் ஏற்பட்டிருந்தது தலையின் வலது புறம் பின்பக்கவாட்டில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. ஸ்கேன் செய்து பார்த்தபோது அவருடைய மூளைக்கு பாதிப்பு இல்லை வலது பக்க parietal bone முறிவு ஏற்பட்டிருந்ததுமுறிவு ஏற்பட்டிருந்தது. இரண்டாவதாக வலது பக்க கழுத்துப்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது ஸ்கேன் செய்து பார்த்தபோது சதை பகுதிக்கு சேதம் அடைந்திருந்ததாக தெரியவந்தது. மூன்றாவதாக வலது காது கீழ் பகுதியில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதேதேபோல் இடது காது கீழ் பகுதியில் மேலோட்டமாக ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. மேலே சொன்ன காயங்களில் முதலாவது காயம் கொடுங்காயம் என்றும் மற்ற காயங்கள் சாதாரண காயம் என்று நான் காயச் சான்றிதழ் வழங்கி உள்ளேன் சிகிச்சைக்குப் பிறகு அந்த நபரை நான் உள்நோயாளியாக அனுமதித்து அவர் எங்கள் மருத்துவமனையில் 01.08.2022 முதல் 04.08.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் காய்ச்சான்றிதழ் என்னால் வழங்கப்பட்டது. காய் சான்றிதழ் ஏற்கனவே அரசு தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது. இதைப் பொறுத்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.காயம் அடைந்த சிவக்குமாரை சிகிச்சைக்காக வந்த போது நான் தான் மருத்துவமனையில் அனுமதித்தேன் என்றால் சரி. அந்த சமயத்தில் சிவக்குமார் மது அருந்தி இருந்தாரா என்பதை பொறுத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதா என்றால் பரிசோதனை செய்யவில்லை. அதற்கு முன்பு வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகச் சொன்னார். மது அருந்திவிட்டு ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தால் அங்கு இருக்கும் கூர்மையான பொருட்கள் அந்த நபர் மீது பட்டால் மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரி.

2. காயச்சான்றிதழ் சம்பவம் 09.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளது யார் சொன்னார்கள் என்றால் அவர் உடன் சிகிச்சைக்கு அழைத்து வந்த அவருடைய சகோதரர் சொன்னார். சிவக்குமார் சம்பவத்திற்கு பிறகு திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது மது அருந்திய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த ஆவணங்கள் உங்களிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாக சிகிச்சை எடுத்துக் கொண்டதை மட்டும் தெரிவித்தார். சிவக்குமாருக்கு நான் மேலே சொன்னது படி சிகிச்சையை கொடுக்கவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தவறான காய் சான்றிதழ் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.01.22 17:58:54 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,